# இலங்கை வங்கி

தீவளாவிய வலுவான கிளை வலையமைப்பையும் இலண்டனில் உள்ள துணை நிறுவனம் உட்பட பரந்தகன்ற வெளிநாட்டு வங்கி வலையமைப்பையும் கொண்டுள்ளதும் உலகளாவிய அதிசிறந்த 1000 வங்கிகளுள் ஒன்றாகவும் இலங்கையின் ஆகச்சிறந்த வங்கியாகவும் தரப்படுத்தப்பட்டுள்ளதுமான இலங்கை வங்கி பின்வரும் பதவிக்குப் பொருத்தமான தகைமைகளும் அனுபவமும் கொண்ட நபர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது:

## தகவற் பாதுகாப்பு மற்றும் உறுதிப்படுத்தல் அதிகாரி
## (Information Security and Assurance Officer)

### தகுதிப் பிரமாணங்கள்

➢ **இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்**

➢ **தகைமைகளும் அனுபவமும்**

- ☐ இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து ஆகக் குறைந்தது இரண்டாம் உயர் வகுப்பு (Second Class Upper) அல்லது அதற்கு மேற்பட்ட வகுப்புடன் தகவற் பாதுகாப்பு / இணையப் பாதுகாப்பு துறையில் பட்டம் பெற்றிருத்தல்.

**அல்லது**

- ☐ இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து ஆகக் குறைந்தது இரண்டாம் உயர் வகுப்பு (Second Class Upper) அல்லது அதற்கு மேற்பட்ட வகுப்புடன் கணினி விஞ்ஞானம் / தகவற் தொழில்நுட்பத்தில் தகவற் பாதுகாப்பு / இணையப் பாதுகாப்பு துறையில் விசேட பட்டம் பெற்றிருத்தல்.

**மற்றும்**

- ☐ தகவற் பாதுகாப்பு, தொழில்நுட்பம், இடர் முகாமைத்துவம் அல்லது தகவற் பாதுகாப்புக் கணக்காய்வு துறைகளில் ஆகக் குறைந்தது ஒரு ஆண்டு அனுபவம்.

- ■ தொழிற்றுறையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்வரும் தொழிற் தகைமைகளைக் கொண்டிருப்பது கூடுதல் நன்மையாகும்

  CISSP மற்றும் / அல்லது CISM அல்லது இந்த மட்டத்திலான தொழில்நுட்பத் திறன்களைக் கொண்டிருத்தல், CISA,CISM, CRISC, CEH, CompTIA, Pen Test+, GIAC Penetration Tester (GPEN), SSCP, CCNA-Security, CySA+, GICSP,GSEC, Certified Identity and Access Manager (CIAM) அல்லது Certified Identity Management Professional (CIMP) அல்லது அதனுடன் தொடர்புடைய சான்றிதழ்.

➢ **ஏனைய பண்புகள்**

- வங்கியின் இலக்கை அடைவதற்கு ஊக்கம் மற்றும் அர்ப்பணிப்புடன் கூடிய நேர்மறையான மனநிலை
- அழுத்தங்களுக்கு மத்தியிலும் திறம்படப் பணியாற்றும் ஆற்றல்
- தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டிருத்தல்
- குழுவாகச் சேர்ந்தியங்கும் ஆற்றலுடன் தொடர்பாடற் திறன்களையும் கொண்டிருத்தல்
- புதிதாகச் சிந்திக்கும் ஆற்றலும் சூழலுக்கேற்ப தகவமைத்துக்கொள்ளும் பண்பும்

➢ **வயது**

விண்ணப்ப முடிவுத் திகதியில் 30 வயது அல்லது அதற்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

### விதிகளும் நிபந்தனைகளும்

➢ இப்பதவி வழமையான வங்கிச் சேவைக்கு புறம்பானதெனினும் (மூடிய சேவை) வங்கியின் பொது விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும்.

➢ விண்ணப்பதாரர் தனது ஓராண்டு கால தகுதிகாண் காலத்தில் வங்கியின் தேவைப்பாடுகளைத் திருப்திகரமாகப் பூர்த்திசெய்யும் பட்சத்தில் தகவற் பாதுகாப்பு மற்றும் உறுதிப்படுத்தல் அதிகாரி பதவியில் வங்கியின் நிரந்தர ஆளணியில் உறுதிப்படுத்தப்படுவார்.

➢ இப்பதவிக்கான சம்பள அளவுத்திட்டம் :

ரூ. 90,645/= - ரூ. 115,045/=
ரூ. 1220/= X 20

(மாறும் வாழ்க்கைச்செலவுப் படியுடன் மாதாந்த மொத்தச் சம்பளம் ஏறத்தாழ ரூ. 189,000/= ஆகும்)

➢ வார இறுதி / விடுமுறை நாட்களிலும் கடமை நேரத்துக்குப் பின்பும் வேலை செய்யக்கூடியவராக இருத்தல்

### தெரிவு நடைமுறை

- ▪ மேற்கூறிய தகுதிப் பிரமாணங்களின் அடிப்படையில் பட்டியற்படுத்தப்படும் விண்ணப்பதாரிகள் உளச்சார்பு பரீட்சையினைத் தொடர்ந்து நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவர்.
- ▪ போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகள் விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவுசெய்ய மட்டுமே பயன்படுத்தப்படும். நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையிலேயே இறுதித் தெரிவு இடம்பெறும்.

### விண்ணப்பிக்கும் முறை

- ▪ எமது இணையதளமான www.boc.lk (Careers என்ற பகுதியின் கீழ்) ஊடாக **2025.06.14ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர்** உங்களது விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவும். சமர்ப்பித்த விண்ணப்பத்தின் விண்ணப்பத் தொடர்பு இலக்கத்தை உங்களது எதிர்காலத் தொடர்புக்காக வைத்திருக்கவும்.
- ▪ மேற்படி வங்கி இணையதளத்தின் Careers என்ற பகுதியில் காணப்படும் விண்ணப்பதாரிக்கான அறிவுறுத்தல்களை கவனமாக வாசித்து வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய இணையவழி விண்ணப்பத்தை நிரப்பவும்.
- ▪ மேற்குறித்த முறை தவிர வேறு வழிகளில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.
- ▪ விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டிராத அல்லது தவறான தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள் ஆட்சேர்ப்பின் எந்தவொரு கட்டத்திலும் மேலதிக அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். சான்றிதழ் உறுதிப்படுத்தலின்போது மேலே கோரப்பட்ட தகுதிப் பிரமாணங்களுக்கான ஆவணச் சான்றுகளைச் சமர்ப்பிக்கத் தவறினால் விண்ணப்பங்கள் உடனடியாக நிராகரிக்கப்படும்.
- ▪ விண்ணப்பதாரி பதவிக்கு விண்ணப்பிக்கும்போது வங்கியின் வலைத்தளத்தின் “மனிதவள முகாமைத்துவ” பக்கத்தில் (https://www.boc.lk/hr-management) உள்ள “ஆட்சேர்ப்புக்கான தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு அறிவித்தல்” பகுதியை வாசித்து அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**மனிதவளப் பிரிவு,**
**இலங்கை வங்கி,**
**தலைமை அலுவலகம்,**
**கொழும்பு 01.**

- *தேர்வு சம்பந்தமான ஆதரவுகளை நாடுவோர் தகைமையை இழப்பர்.*
- *தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.*
- *நிரப்பப்படவுள்ள பதவிகளின் எண்ணிக்கை தொடர்பில் தீர்மானிக்கும் அல்லது ஆட்சேர்ப்பைப் பிற்போடும் / இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.*
- *வங்கியானது அதன் தனிநபர் தரவுப் பாதுகாப்புக் கொள்கைக்கு இணங்க உங்கள் தகவல்களின் தனியுரிமையையும் இரகசியத்தன்மையையும் பாதுகாக்கிறது.*


இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

1975 BOC CALL CENTRE
www.boc.lk

AA-(lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்.
பரிந்துரைகள்/கருத்துக்கள்/முறைப்பாடுகளுக்கு - https://www.boc.lk/contact

தலைமை அலுவலகம், BOC சதுக்கம்,
இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.